செ.வெ.எண்.570 நாள்.01.07.2010.

**இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.**

**செய்திக்குறிப்பு**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் சீராய்வுக் கூட்டம் நாள் 7.07.2010.**

****

இந்து சமய அறநிலையத் துறையில் நடைபெற்று வரும் நலத்திட்ட பணிகள், திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி, கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகள் ஆகியவற்றில் இத்துறை அலுவலர்களின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்த சீராய்வுக் கூட்டம் 7.07.2010 அன்று சென்னை, ஆணையர் அலுவலகத்தில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு **கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 13வது நிதிஆணைய நல்கையின் கீழ் வழங்கப்படும் நிதியிலிருந்து திருப்பணி மேற்கொள்ளப்பட வேண்டிய திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்வது குறித்தும், அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களின் முன்னேற்றம், திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகள், நிலுவையில் உள்ள திட்டங்களை தக்க முறையில் விரைவில் நிறைவேற்றுவதற்கான வழி முறைகள், அரசு, இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சுற்றுலாத்துறை நிதி உதவிகள் மூலம் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து சீராய்வு செய்யப்பட்டது. புராதன திருக்கோயில்களின் புனரமைப்பு, திருப்பணி மற்றும் குடமுழுக்குகள் ஆகிய பணிகளுக்கு காலக்கெடு நிர்ணயித்து விரைந்து நிறைவேற்றிடவும், மேலும் நலத்திட்டங்கள் மற்றும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்து தனிக் கவனம் செலுத்தி விரைந்து முடித்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் கூடுதல் ஆணையர்(பொது), கூடுதல் ஆணையர் (விசாரணை), இணை ஆணையர் (தலைமையிடம்), இணை ஆணையர் (திருப்பணி), செயற்பொறியாளர், மண்டல இணை ஆணையர்கள், இணை ஆணையர்/செயல் அலுவலர்கள், துணை ஆணையர்/செயல் அலுவலர்கள், உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள், பொறியியல் துறை அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

7/7/10

கூடுதல் ஆணையர் (பொது)

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.